Indian Vedic School
Language of the Gods

# FAMOUS MORAL STORIES

BY INDIAN VEDIC SCHOOL

TAMIL VOL - 15



























Indian Vedic School
Language of the Gods

# FAMOUS MORAL STORIES

BY INDIAN VEDIC SCHOOL

TAMIL VOL - 15



























# INDEX


| | |
|---|---|
| WONDER LAKE | 1-9 |
| MAGICIAN | 10-18 |
| ORDER OF GOD | 19-26 |
| BHASMASURA | 27-37 |
| FREE ADVICE | 38-45 |
| REVANGE | 46-53 |
| GOOD SAMARITANS | 54-62 |
| THREE THIEVES | 63-69 |
| FINAL-LESSON | 70-76 |


ஆச்சர்ய ஏரி


ஜான்சன் சூடான் கிராமத்தில் வசிக்கும் ஒரு அனாதை. அவன் பகுதி நேர வேலைகள் செய்து தனது வாழ்க்கைக்கு தேவையான பணத்தை சம்பாதிப்பான்.
ஒரு நாள் அவன் ஒரு அழகான பெண் அவனை கடந்து செல்வதை பார்த்தான்.
ஆஹா..அவள் மிகவும் அழகாக சுந்தரமாக இருக்கிறாள். நான்அவளுட ன்காதலில்விழுந்தேன்நா ன்நினைக்கிறேன்.
பாட்ரிசியா, நான்உண்மையில்உங்களை விரும்புகிறேன் மற்றும் உங்களை திருமணம்செய்துகொள்ளவிரும்புகிறேன். நீங்கள் ....?
நிச்சயமாக, எனக்கும் உங்களை பிடித்திருக்கிறது. அனால் எனது தந்தை உங்களிடம் ஆயிரம் டாலர் மற்றும் ஒரு பகட்டான வீடு இல்லாதவரை இந்த திருமணத்திற்கு ஒத்துக்கொள்ள மாட்டார்.
ஜான்சன் பாட்ரிசியா வீட்டிற்கு செல்கிறான்.
ஐயா, நான் உங்கள் மகளை மணக்க விரும்புகிறேன்.
என்னால் எனது மகளை உனக்கு மணம் முடிக்க முடியாது. உன்னால் எனது நிபந்தனைகளை நிறைவேற்ற முடியாது.


ஜான்சன் திரும்ப வீட்டிற்கு செல்கிறான்.
கடவுளே. இது அநியாயம். பணம் இல்லாத ஒரே காரணத்தால் நான் விரும்பிய பெண்ணை என்னால் மணக்க முடியவில்லை. ஆனால் அவள் இல்லாமல் வாழ முடியாது. நான் இறப்பதே நல்லது.
ஜான்சன் தனது வாழ்வை முடித்துக்கொள்ள முடிவு செய்கிறான். கிராமத்திற்கு வெளியே உள்ள ஏரியை நோக்கி செல்கிறான்.
இந்த ஏரியில் குப்பை உள்ளது மேலும் இதில் உள்ள தண்ணீரை உபயோகிக்க முடியாது. மக்கள் ஏன் இதைஆச்சர்ய ஏரி என்று கூறுகிறார்கள்?
எனது சிறு வயது முதல் நான் கேள்வி பட்ட வரை, இந்த ஏரியில் ஒவ்வொரு சனிக்கிழமையும் தேவதைகள் வந்து குளிப்பார்கள். இந்த ஏரி அவர்களுக்காக உருவாக்கப்பட்டது. மனிதர் களுக்காக இல்லை. யாராவது இந்த ஏரியை உபயோகித்தால் அவர்கள் தேவதைகளால் தண்டிக்க படுவார்கள்.
இந்த ஏரியை நான் உபயோகித்தால், தேவதைகள் எனக்கு மரண தண்டனை அளிப்பார்கள். இன்று சனிக்கிழமை. நான் ஏரியில் இறங்குகிறேன்.


நான் தண்ணீரில் இவ்வளவு நேரமாக இருக்கிறேன், தேவதைகள் இன்னும் வரவில்லையே. வரும் அறிகுறி கூட இல்லை. கிராமத்தார்கள் இந்த ஏரியை பற்றி சொல்லியது உண்மையில்லை போலிருக்கிறது.
திடீரென, ஜான்சனுக்கு ஒரு சத்தமான குரல் கேட்டது..
"ஜான்சன் நீ கொலை செய்ய படுவாய்"
"ஜான்சன் நீ கொலை செய்ய படுவாய்"
நீ யார்? ஏன் இவ்வளவு சத்தமாக பேசுகிறாய்? நீ எனக்கு பயந்து மரத்தின் பின் மறைந்து கொண்டிருக்கிறாய்?
உடனே, மரத்தின் பின்னிருந்து ஒரு புரியாத உருவம் வெளி வந்தது. அது ஆறு அடி உயரம் கொண்டு கருப்பு உடை அணிந்திருந்தது. அதன் கண்கள் மட்டுமே தெரிந்தன. கண்களும் சிவப்பு நிறத்தில் இருந்தன.



நான் இந்த ஏரியை உபயோகிப்பதால் உனக்கு என்ன பிரச்சினை?
நான் இந்த ஏரியின் காவல்காரன். யாராவது இந்த ஏரியை உபயோகித்தால், அவர்களை நான் கொலை செய்து விடுவேன்.
நல்லது. நான் இங்கு இறக்க தான் வந்துள்ளேன்.
ஏன்?
ஏனெனில், நான் ஒரு பெண்ணை காதலிக்கிறேன். ஆனால் அவளது தந்தை நான் ஏழை என்பதால் என்னைஅவளுக்கு மணமுடிக்க மறுத்துவிட்டார்.
தெரியாத குரல் அவனை பார்த்து சிரிக்கிறது.
இந்த அறிவற்ற காரணத்திற்கு நீ இறக்க விரும்புகிறாயா? சரி, நான் சொல்வதை கேள், உனது கனவுகள் நிறைவேற நான் உதவுகிறேன். ஆனால் நீ அதன் பிறகு இந்த ஏரியின் பக்கம் வர மாட்டேன் என உறுதி அளிக்க வேண்டும். நாளை இதே நேரத்திற்கு இங்கு வந்து பணத்தை பெற்று கொள்.
சரி. நன்றி. இனிமேல் நான் இந்த பக்கமே வர மாட்டேன்.
யாருடைய குரல் அது? ஏன் கருப்பு உடை அணிந்திருந்தது? என்னை கொலை செய்ய சக்தி இருந்தும் என்னை கொல்லாமல் எனக்கு ஏன் பணம் தர முன் வந்தது?தேவதைகள் எப்படி மனிதர்களுக்கு பணம் தர முடியும்? நான் இதை பற்றி கிராம தலைவரிடம் சொல்ல வேண்டும்.


மறு நாள், ஜான்சன் கிராம தலைவர் திரு. ஸ்மித் அவர்களை சந்தித்து எல்லாவற்றையும் விளக்கினான்.
ஜான்சன், யாரும் தேவதையின் சக்தியை பகைத்து கொள்ள கூடாது. எனது கருத்தில், நீ நாளை சென்று பணத்தை பெற்று கொள். அதன் பிறகு அந்த ஏரியின் பக்கமே செல்லாதே.
இன்னுமொரு முக்கியமான விஷயம், இந்த நிகழ்வை பற்றி யாரிடமும் சொல்லாதே. இல்லையேல் அவர்கள் உன்னை பைத்தியம் என நினைப்பார்கள்.
ஜான்சன் திரு. ஸ்மித் சொல்வதை கேட்டுவிட்டு அமைதியாக சென்றான். ஆனாலும் அவனால் இதை ஏற்க முடியவில்லை. அதனால் அரசரை பார்ப்பது என்று முடிவு செய்தான்.


ஜான்சன் நடந்த அனைத்தையும் அரசரிடம் சொல்கிறான்.
அரசே, உங்களிடம் சொல்லியது போல், என்னால் ஏரியில் தேவதை இருப்பதை ஒப்புக்கொள்ள முடியவில்லை. நான் திரு. ஸ்மித் அவர்களிடம் கூட இதை பற்றி சொன்னேன். ஆனால் அவர் இதில் ஈடுபாடு காட்டவில்லை. யாரோ மக்களை ஏரியின் பக்கம் வரவிடாமல் இருப்பதற்காக இதை செய்கிறார்கள்.
அரசே, உங்கள் உதவி இல்லாமல், என்னால் இதில் இருக்கும் உண்மையை அறிய முடியாது. நீங்கள் உங்கள் வீரர்களை அனுப்புங்கள்.
நான் உனது கருத்துக்களை ஒப்பு கொள்கிறேன் ஜான்சன். நான் என்னுடைய சிறந்த வீரர்களை உன்னுடன் அனுப்புகிறேன்.


ஜான்சன் வீரர்களுடன் ஏரிக்கு செல்கிறான். அங்கு அவர்கள் ஏரியை சுற்றி தேடினார்கள்.
அவர்கள் அந்த உருவத்தை கண்டு பிடித்தனர். ஆனால் அதிர்ச்சிக்குரிய விஷயம், அது தேவதை அல்ல. ஒரு மனிதன். அவர்கள் முகமூடியை அகற்றி பார்த்து அதிர்ச்சி அடைந்தனர். ...
திரு ஸ்மித். நீங்களா அந்த காவல்காரர்?
அரசே, என்னை மன்னியுங்கள். நானும் இன்னும் சில கிராம தலைவர்களும் சேர்ந்து நீங்கள் கிராம வளர்ச்சிக்காக கொடுக்கும் நிதியில் இருந்து கொஞ்சம் பணம் எடுத்து அதை ஏரியில் மறைத்து வைப்போம். ஏரியை பற்றிய கட்டுக்கதையை எங்களுக்கு சாதகமாக பயன் படுத்தினோம். யாராலும் கண்டு பிடிக்க முடியாது என்றும் நினைத்தோம்.
ஜான்சன் ஏழையாக இருப்பதால் அவனுக்கு பணம் கொடுத்தால், அமைதியாக இருப்பான் என்று நினைத்தோம். ஆனால் நாங்கள் நினைத்த படி நடக்காமல் உண்மை வெளியே வந்து விட்டது.
நீங்கள் தண்டிக்கப்படுவீர்கள். காவலர்கள் அவனையும் இந்த சூழ்ச்சியில் ஈடு பட்ட அனைவரையும் கைது செய்வார்கள்.


ஜான்சனால் தான் இந்த உண்மை எனக்கு தெரிய வந்தது. இந்த துணிச்சலையும் நேர்மையையும் நான் பாராட்டுகிறேன். இதற்காக நான் அவனை கிராம தலைவராக நியமிக்கிறேன்.
ஜான்சன் தன்னை வெற்றிகரமாக ஆக்கியதற்காக பாட்ரிசியாவை பாராட்டினான்.
நான் மிகவும் மகிழ்ச்சியாக உள்ளேன். நான் உன்னை மணக்கும் அளவு சம்பாதித்து விட்டேன். உனது தந்தை இப்பொழுது நமது திருமணத்திற்கு ஒத்துக் கொள்வாரா?
எனக்காக தாங்கள் இவ்வளவு பெரிய அபாயகரமான காரியத்தை செய்திருக்கிறீர்கள்.எனது தந்தை ஒத்துக் கொள்ளவில்லையென்றாலும் நான் உங்களை மணப்பேன்.
ஜான்சன் பாட்ரிசியாவை மணந்து ஊர் தலைவரானான். ஏரியில் உள்ள குப்பைகளை சுத்தம் செய்து ஏரியின் தண்ணீரை சுத்தம் செய்து கிராமத்திற்கு உபயோகப்படுமாறு செய்தான். ஆனாலும் இன்னும் ஊர்க்காரர்களுக்கு அது ஆச்சர்ய ஏரியாக இருக்கிறது.
முடிவு


மந்திரவாதி


முன்னொரு காலம்
ஒரு ராஜ்ஜியத்தில்..
மந்திரி, நமது ராஜ்ஜியத்தில்
இளைஞர்களையே காணவில்லையே.
அவர்கள்எங்கே?
நான்
கண்டுபிடித்து
சொல்கிறேன்
அரசே
மந்திரி இளம்ஆண்கள்காட்டில்வேட்டைக்கு
சென்றுபின்னர் மறைந்துவிடுகிறார்கள் என
கண்டுபிடித்தார்.
விசித்திரமாக இருக்கிறதே. எனது
ராஜ்ஜியத்தில் என்ன நடக்கிறது?
இதை பற்றி எனக்கு உடனே ஒரு
அறிக்கை வேண்டும்.
இரண்டு நாட்களுக்கு
பிறகு மந்திரி
அரசரிடம் வருகிறார்..
அரசே, காட்டில் கிரால் என்று ஒரு
மந்திரவாதி இருக்கிறான். அவன்
காட்டுவிலங்குகளை அழகிய கன்னிகளாக
மாற்றி விடுகிறான். நமது இளைஞர்கள்
இந்த அழகை கண்டு மயங்கி
தானாகவே காட்டில் தங்கிவிடுகிறார்கள்.
அரசர் இதை பற்றி
கவலையுற்று ஒரு
துறவியிடம் சென்றார்.
இது எல்லாம் அந்த
மந்திரவாதி கிராலின்
செயல்.


துறவி தன்னை ஒரு இளைஞனாக மாற்றி கொண்டு, வில் அம்புடன் காட்டிற்கு சென்றார்.
மந்திரவாதி கிரால் துறவியை கண்டுபிடித்துவிட்டான். அவன் துறவியிடம் பல முறை தோற்றிருக்கிறான்.
இந்த முறை நான் துறவியை முடித்து விட வேண்டும்.
மந்திரவாதி கிரால் அழகான பெண்களை துறவியை மயக்க அனுப்புகிறான்.துறவி அவர்களை பார்த்து மயங்கிய மாதிரி நடிக்கிறார்.
உங்களில் யாரேனும் என்னை தோற்கடித்தால், நான் உங்கள் அடிமையாக இருப்பேன்.


மந்திரவாதி கிரால் தன்னை ஒரு பெண்ணாக மாற்றி கொண்டான்.
துணிச்சலானமனிதனே, நான் உனக்கு ஒரு கதை சொல்கிறேன். அதில் இருக்கும் புதிரை நீ தீர்த்தாயானால், நான் உனக்கு அடிமை இல்லையேல் நீ எனக்கு அடிமை.
துறவி மந்திரவாதியை கண்டுபிடித்துவிட்டார்.
நான் ஒப்புகொள்கிறேன். கதையை சொல்.
முன்னொரு காலத்தில் புத்திசாலியாக ஒரு அரசர் இருந்தார். அவரை யாராலும் ஏமாற்ற முடியாது.
என்னை யாராவது ஏமாற்றினால், அவர்களுக்கு நான் ஆயிரம் பொற்காசுகள் அளிப்பேன்.
பரிசை அறிவித்த பிறகும் யாரும் முன்வரவில்லை.


என்னை யாராவது ஏமாற்றினால், எனது மகளை நான் அவருக்கு மணம் முடிப்பேன்.
நிறைய இளைஞர்கள் முன் வந்தனர்.
நீங்கள் அனைவரும் முன்பு ஏன் வரவில்லை?
அரசே, முன்பு நீங்கள் அறிவித்த பரிசு மிகவும் குறைவு, மகத்துவம் இல்லாதது. ஆனால் நீங்கள் . உங்கள் மகளை மணம் முடிப்பதாக சொன்னதால் முயற்சி செய்ய வந்தோம்.
திடீரென, ஒரு இளைஞன் கத்த ஆரம்பித்தான்.
பாம்பு.. அரசே.. உங்கள் பின் ஒரு பாம்பு உள்ளது.
அரசர் பதிலளிக்கவில்லை.
நீ தோற்று விட்டாய், நீ திரும்ப செல்லலாம்.
அரசே, நான் வென்றால், என்னால் இளவரசியை இந்த வயதில் மணக்க முடியாது. அதனால் நீங்கள் எனக்கு ஆயிரம் பொற்காசுகள் தாருங்கள்.


நீ வயதானவன் அல்ல.. நீயும் இங்கு என்னை ஏமாற்றத்தான் வந்திருக்கிறாய். நீயும் தோற்றுவிட்டாய்.
ஒரு நாள் அரசர் சோர்வுற்று ஒரு அறிவிப்பு செய்தார்...
தோற்பவர்கள் சவுக்கடி பெறுவார்கள்.
மிக சிலர் அரசரை அணுக தொடங்கினார்கள்.
ஒரு நாள், டியான் என்ற இளைஞன் ஒரு கிழவியின் உணவகத்தில் சாப்பிட்டு பணம் கட்டாமல் தப்பிக்க பார்த்தான்.
உன்னுடைய திறமையை அரசரிடம் காட்டு, என்னை போல் வயதானவளிடம் அல்ல.
அரசரை ஏமாற்றுவதற்கு எனக்கு உதவுவாயா?


நான் ஏன் உதவ வேண்டும்? உனக்கு இளவரசி கிடைப்பாள்? எனக்கு என்ன கிட்டும்?
நீ என்னுடன் மாளிகையில் எனது தாயாக இருக்கலாம்.
கிழவி டியானுக்கு உதவ ஒப்பு கொண்டாள்.
ஒரு நாள், கிழவி தனது தலையில் சில பானைகளை வைத்து கொண்டு டியானுக்கு என்ன செய்ய வேண்டுமென்று சொன்னாள். இருவரும் அரசர் நடந்து கொண்டிருந்த அரச தோட்டத்திற்குள் சென்றனர்.
கிழவியேதொலைந்துபோ.
ஏன்கத்து கிறாய்?


அரசே,
இந்தகிழவிஅறுபதுஆண்டுகளுக்குமுன்
அவளது சால்வைதிருடப்பட்டதாகவும்,
இது அவளுடையது என்றும் சொல்கிறாள்.
ஆனால் நானோ அந்தநேரத்தில் பிறக்கக்
கூட இல்லை.
அவன் பொய்
சொல்கிறான் அரசே,
இது என்னுடைய
சால்வை.
உன்னிடம்
என்ன ஆதாரம்
உள்ளது?
இதுஒருமந்திரசால்வை,
தங்கள்தோள்மேல்
இந்தசால்வையையார்
போட்டு கொண்டாலும்,
அவர்களை யாராலும்
கட்டுப்படுத்த முடியாது.
அவள்பொய்
சொல்கிறாள்.
தன் தலையில்
இருக்கும் பானைகளை
இப்பொழுது
ஒன்றொன்றாய்
உடைப்பாள்.
கிழவி பானைகளை உடைத்தாள்.
இந்தவிலைம
திப்பற்றசால்வைஎனக்கு
சொந்தமாகவேண்டும்.
அரசர் நிறைய பணம் கொடுத்து சால்வையை வாங்கினார்.
அரசே,
இளவரசியை எனக்கு
மணம் முடித்து
வையுங்கள்.


யார் வெற்றி பெற்றது? கிழவியா? டியானா?
அரசர் பரிசு இளவரசியுடன் திருமணம் என்று அறிவித்தார். அதனால் இந்த போட்டி ஆண்களுக்கு.
கிழவிக்கும் டியானுக்கும் முன்பே ஒப்பந்தம் இருந்தது. டியான் வெற்றி பெற்றால் கிழவியை தனது தாயாக வைத்துகொள்வதாக இருந்ததால், டியான் தான் வெற்றி பெற்றான்.
மந்திரவாதி தோற்றுப் போய் துறவியின் அடிமையானான்.,
நன்றி துறவியே.
மந்திரவாதி எல்லா அழகிகளையும் விலங்குகளாக மாற்றினான். அரசர் தனது இளைஞர்களுடன் நாடு திரும்பினார்.
முற்றும்

# கடவுளின் உத்தரவு




மாக் என்று ஒரு கபடமான மனிதன் இருந்தான். அவன் கடவுளை கனவில் பார்த்தேன் என்று சொல்லியே எப்போதும் மக்களை ஏமாற்றி கொண்டிருந்தான்
மூட நம்பிக்கை உள்ள மனிதர்களை மாக் தனது சொல்லை நம்புவதற்காக தவறாகபயன் படுத்தி கொண்டான்.
அதே கிராமத்தில் டுடோ என்று ஒரு ஏழை ஊனமுற்ற மனிதன் இருந்தான். அவனால் சரி வர நடக்க முடியாது. அவன் தினமும் மாக்கிடம் தன்னை பற்றி கடவுளை கேட்குமாறு சொல்வான்...
ஒரு நாள் மாக் நல்ல மனநிலையில்இருந்தான்..
நேற்று நான் கடவுளிடம் உன்னை பற்றி கேட்டேன். அவர் உன்னுடைய நிலைமையில் எந்த மாற்றமும் வராது என்றும் நீ மற்றவர்களை ஏமாற்றி வாழ வேண்டும் என்று சொன்னார்.


கடவுளாவது என்னை பற்றி நினைத்தாரே.
ஒரு நாள் மாக் டுடோவை அழைத்தான்.
என்னுடைய மைத்துனன் உனது வீட்டருகில் வசிக்கிறான். அவனிடம் இந்த வெள்ளி குடத்தை கொடுத்து விடு.
டுடோ குடத்தை எடுத்து சென்றான்.
கடவுள் என்னை மற்றவரை ஏமாற்றி வாழச் சொல்லி இருக்கிறார்.
அவன் அந்த குடத்தை எடுத்துக்கொண்டு தனது வீட்டிற்கு சென்றான்.
மாக்கிற்கு டுடோ அந்த குடத்தை கொடுக்கவில்லை என்று தெரிய வருகிறது. அவன் உடனே விரைந்து டுடோவின் வீட்டிற்கு வந்து குடத்தை பற்றி விசாரித்தான்.


குடமா? என்ன குடம்?
நீ பொய் சொன்னால், நான் உன்னை கொன்று விடுவேன்.
அவன் டுடோவின் வீடு முழுவதும் தேடினான் ஆனால் வெள்ளி குடம் கிடைக்கவில்லை.
எனது வெள்ளிக் குடம் மிகவும் மங்களகரமானது. அந்த குடத்தை வாங்கிய நாள் முதல் எனக்கு அதிர்ஷ்டம் வந்தது.
டுடோ, கேள், அந்த வெள்ளி குடம் ஐம்பது பவுண்டுகள். நீ அந்த குடத்தை திரும்ப கொடுத்தால், நான் உனக்கு அதை விட அதிகமாக தருவேன்.
சரி. நீ முதலில் பணம் கொடு.
இந்தா இதோ நூறு. நான் வீட்டிற்கு சென்று இன்னும் ஐம்பது தருகிறேன். நீ குடத்தை கொடு.



டுடோ நூறை பைக்குள் வைத்து கொள்கிறான்.
நீ முதலில் பணத்தைஅனுப்பு பிறகு குடத்தை பற்றி பேசு.
சரி. எனது மகனிடம் பணம் கொடுத்து அனுப்புகிறேன். நீ அவனிடம் குடத்தை கொடு.
டுடோ மாக்கின் மகனிடமிருந்து ஐம்பது பவுண்டுகளை பெற்று கொண்டு குடத்தை தராமல் அனுப்புகிறான்.
மாக் மறுபடியும் டுடோவின் வீட்டிற்கு ஓடி வருகிறான்.
நான் நூற்றி ஐம்பது பவுண்டுகள் கொடுத்துவிட்டேன். நீ குடத்தை திரும்ப கொடு.
எனக்கு வெள்ளிக் குடத்தை பற்றியும் தெரியாது. நூற்றி ஐம்பது பவுண்டு கள்பற்றியும் தெரியாது.


மாக் நீ அவனை அரசவைக்கு அழைத்து செல், அங்கே அவனை அடிப்பார்கள், அவன் உண்மையை ஒப்புக் கொள்வான்.
என்னை எங்கு வேண்டுமானாலும் கூட்டி செல்லுங்கள். நான் பொய் சொல் லவில்லை.
அன்றிரவு டுடோ மாக் வீட்டிற்கு சென்றான்.
நீ என்னை அரசவைக்கு வர சொன்னாய், ஆனால் என்னையும் என்னுடைய கிழிந்த துணிகளையும் பார்.
என்னை இந்த மாதிரிபார்த்தால், அரசர் என்னை உன்னுடைய நண்பன் என்றோ எதிரி என்றோ நினைக்க மாட்டார். அதனால் உன்னுடைய உடைகளில் ஒன்றை கொடு.


அவன் சொல்வது சரி. அரசர் நான் அவனுக்கு நூற்றி ஐம்பது பவுண்டுகள் கொடுத்தேன் என்றால் நம்ப மாட்டார்.
சரி. உடையை எடுத்து கொள்.
மறு நாள், டுடோ மாக்கின் உடை அணிந்து அரசவைக்கு வந்தான்.
மாக் டுடோவை பற்றி புகார் செய்கிறான்.
அரசே, அவன் தவறான பழி சுமத்துகிறான். நாளை இவன் நான் அவன் உடையை அணிந்துள்ளேன் என்று கூட சொல்லுவான்.
இது என்னுடைய உடை இல்லை என்று சொல்லுகிறாயா?


அரசர் ஊனமுற்ற டுடோவை தன் முன் மாக் இப்படி அவமான ப்படுவதை பார்த்து கோபம் கொண்டார்.
மாக் டுடோவின் மேல் தவறான பழி சுமத்தி உள்ளான்.
அவனுக்கு ஐம்பது சவுக்கடி கொடுங்கள் மற்றும் ஐநூறு பவுண்டுகள் அபராதம். அந்த ஐநூறு பவுண்டுகளை டுடோவிடம் கொடுங்கள்.
இது கடவுளின் உத்தரவு. நான் அவர் சொன்னபடி தான் வாழ்கிறேன்.
முற்றும்


பத்மாசுரன்


முன்னொரு காலத்தில் பத்மாசுரன் என்ற அரக்கன் சிவனை நோக்கி தவம் இருந்தான்.
ஓம் நமச்சிவாய... ஓம் நமச்சிவாய...
சில மாதங்கள் கடந்தன...
ஓம் நமச்சிவாய... ஓம் நமச்சிவாய...
சில வருடங்களும் கடந்தன...


பத்மாசுரன் ஒரு கூர்மையான கத்தியை எடுத்து, தன் வலது முழங்காலிலிருந்து ஒரு துண்டு தசையை வெட்டி எடுக்கிறான்...
......வெட்டிய தசையை எரியும் வேள்வித் தீயில் வீசுகிறான்....
இறைவா, இந்தக் காணிக்கைக்கு இரங்கி, என் முன் தோன்றி அருள்புரிவீராக!
ஓம் நமச்சிவாய...
பத்மாசுரன் மேலும் தன் தவத்தைத் தொடர்ந்தான்...


ஓம் நமச்சிவாய...
இறைவா,
தங்களை நான் எவ்வாறு
மகிழ்விப்பேன்...
என் தலையை
காணிக்கையாக்குவதுதான்
தங்களை மகிழ்விக்கும் என்றால்
நான் அதற்கும் சித்தமாயி
ருக்கிறேன்...
பத்மாசுரன் தன் தலையை வெட்ட எத்தனிக்கும்
நிலையில்...
ஓ...என்
இறைவா...
பத்மாசுரா...


பக்தா, என்னை மகிழ்விக்க நீ உன் உயிரை அர்ப்பணிக்க வேண்டியதில்லை. வெறும் தண்ணீரை அர்ப்பணம் செய்தாலும் எனக்குத் திருப்தியே.
உனக்கு என்ன வரம் வேண்டும்? கேள்...
நான் இந்த உலகத்தையே வெல்ல விரும்புகிறேன்...
இறைவா, யார் தலையில் நான் கை வைத்தாலும், அவர்கள் எரிந்து சாம்பலாக வேண்டும் என்ற வரத்தைத் தாங்கள் எனக்கு அருள வேண்டும்.


அப்படியே ஆகட்டும்...
நன்றி இறைவா...
இறைவா, இந்த வரம் செயல்படுகிறதா என்பதை என் கையை உங்கள் தலையில் வைத்து உறுதிப்படுத்திக்கொள்கிறேன்...
ஹா...
கூடாது....
என்னிடம் நீ எவ்வாறு இப்படி நடந்துகொள்ளலாம்?


ஹோ...இவனை
தந்திரமாகத் தான்
ஏமாற்ற வேண்டும்...
பத்மாசுரன் சிவபெருமானைத்
தேடி அலைந்தான்...
விஷ்ணு...
என்னை அந்த
துஷ்ட அசுரனிடமிருந்து
காப்பாற்றுங்கள்...
அவனை
என்னிடம்
விடுங்கள்...


காட்டில் ஒரு பாறையின் மேல் பத்மாசுரன் அமர்ந்துகொண்டு, எல்லா திசைகளிலும் பார்த்தவாறு இருந்தான்.
அவன் உட்கார்ந்திருந்த இடத்தை நோக்கி ஒரு பிராமணச் சிறுவன் சென்று, அவனுடன் பேச முயற்சிக்கிறான்.
வெகு நேரமாக நீங்கள் இங்கேயே இருப்பதைப் பார்த்தேன்...
எதற்காக அலைந்து கொண்டிருக்கிறீர்கள்?யாரைத் தேடுகிறீர்கள்?கொஞ்ச நேரம் அமைதியாய் இருங்கள்...
நான் சிவனிடமிருந்து ஒரு வரம் வாங்கினேன்...
அதை அவரிடம் சோதித்துப் பார்க்க முனைந்தபோது, அவர் ஓடிவிட்டார்...


நீ அவர் தலையில் கை வைத்த மறுகணம் அவர் உன்னை ஏமாற்றியதை நீ தெரிந்துகொளவாய் என்பதை அறிந்துதான் அவர் ஓடிவிட்டார்...
என்ன? சிவன் ஒரு பக்தனை ஏமாற்றினாரா?
என்னால் நம்ப முடியவில்லை...
அப்படியென்றால், நீங்கள் உங்கள் கையை உங்கள் தலையில் வைத்து வேண்டுமானால் சோதித்துப் பாருங்களேன்...



நல்ல யோசனை...
இல்லை...
இல்லை...
இல்லை...
இல்லை...
ஆ...ஆ...
ஆ...ஆ...
ஆ...ஆ...
ஆ...ஆ...
ஆ...ஆ...


பிராமணச் சிறுவன் விஷ்ணுவாக தோற்றம் எடுக்கிறார்.
பத்மாசுரன் தன் அகங்காரத்தால் தன் உயிரையே இழந்தான்.
அடுத்தவரை அழிக்க வரம் வாங்குபவன் அந்த வரத்தாலேயே அழிவான்.
முடிவு.


இலவச அறிவுரை


ஒருநாள்பேரரசர்ஜியான் அவருடையஆலோசகர்களுடன்நீதிமன்றநட வடிக்கைகள்நடத்திக்கொண் டிருந்தார்.
உத்தியோகநடவடிக்கைகள்முடித்தபிறகு, நீதிமன்றத்தில்ஒவ்வொருவரும்ஓய்வாக சாதாரணமாக பேசி கொண்டிருந்தனர்.
நண்பர்களே.. ஒருவர் சுலபமாக செய்ய கூடிய வேலை எது? சொல்லுங்கள்.
லு சின் மற்றும் பு யென் பதிலளித்தனர்.
சுவாசிப்பது மிக சுலபம், அரசே!
தண்ணீர் குடிப்பது தான் அரசே.
வு யான் அரசரின் விருப்பமானவன்.
வு யான். நீ ஏன் அமைதியாக இருக்கிறாய்?
ஏனெனில் நான் ஒப்பு கொள்ள மறுக்கிறேன். உங்களுக்கு ஜலதோஷம் பிடித்தால், மூச்சு விடுவதும் கஷ்டம், தண்ணீர் குடிப்பதும் கஷ்டம்.


வு யான் அரசருக்கு அருகில் சென்றான்.
என்னைப் பொறுத்தவரை, இலவச மருத்துவ அறிவுரை கொடுப்பது தான் மிக சுலபம் அரசே.
பேரரசர்ஜியான் வு யான் சொல்வதை கேட்டு சிரித்தார்.
வு யான், அது எப்படி சுலபம்? பல விஷயங்களை நன்றாக படித்த பின்பே ஒருவர் மருத்துவராக முடியும்.
நீங்களே இந்த அவையில் அதை சோதித்து பாருங்கள் அரசே.
வு யான் திட்டம் தீட்டி அரசரை அதன் படி நடந்து கொள்ள சொல்கிறான்.
வு யான் இப்போது என்ன செய்ய போகிறான்?


சில நாட்களுக்கு பிறகு..
அரசர் இன்று ஏன் வரவில்லை?
பேரரசர்ஜியான் உடல் நலம் சரியில்லை. அவருக்கு மிகுந்த தலை வலி.
நீதி மன்றத்தில் அனைவரும் இதை பற்றி பேசி கொண்டிருந்தனர். எல்லோரும் ஆளுக்கு ஒரு ஆலோசனை வழங்க முடிவு செய்தனர்.
பேரரசர்ஜியானை பார்க்க மக்கள் அவர் மாளிகைக்கு சென்றனர்.
பேரரசர்ஜியான் தன் தலையில் ஒரு துணியை சுற்றி கொண்டு மெத்தை மேல் படுத்திருந்தார்.


ஒரு சபை உறுப்பினர் முதலில் வந்தார்..
அரசே, உங்களால் தலை வலி காரணமாக நகர முடியவில்லை என்று கேள்வி பட்டேன். சுஸ்ருத சிகிச்சை முறைப்படி, நீங்கள் பட்டினி இருந்து கருமிளகுப் பொடிஇரவில் அருந்தினால் போதும்.
அடுத்து இன்னொருவர் வந்தார்..
அரசே, நமது மருத்துவர்களால் தங்கள் தலை வலிக்கு தீர்வு வழங்க முடியவில்லை என்பது பெரிய அவமானம்.
உங்களுக்கு ஆட்சேபனை இல்லையென்றால் நான் எனது தாத்தாவின் வைத்தியம் பற்றி சொல்கிறேன்.
அதற்கு பெயர் "தண்ணீர் சிகிச்சை", நீங்கள் உங்கள் மூக்கின் மூலம் தண்ணீரை சுவாசித்தால், உங்கள் வலி மறைந்துவிடும்.


இன்னொருவர் வந்தார்.
மூக்கின் மூலம் தண்ணீரை சுவாசிப்பது கடினம். நீங்கள் சுக்கை அரிந்து உங்கள் நெற்றி மேல் பற்று போடுங்கள்.
அடுத்து இன்னொருவர் வந்தார்.
அரசே, உங்களை பார்க்க மிகவும் கஷ்டமாக இருக்கிறது. நீங்கள் கரும் மிளகை அரைத்து உங்கள் கண்களில் போடுங்கள். வலி காணாமல் போய்விடும்.
ஒவ்வொருவரும் ஒவ்வொரு சிகிச்சை / ஆலோசனை பேரரசருக்கு வலி தீர்வதற்கு சொன்னார்கள்.
பேரரசர் ஜியானுக்கு சில மக்கள் வெவ்வேறு வழிகள் பரிந்துரைத்தார்கள். முக்கியமாக எல்லோரும் அவருடைய கண்களுக்கு சிகிச்சை அளிக்க சொன்னார்கள்.


மற்றும் சிலர், புதினா தழை, கச கச மற்றும் நெய்யை உபயோகிக்க சொன்னார்கள்.
நாள் முழுவதும் நிறைய மக்கள் அரசரின் மாளிகைக்கு வந்து நிறைய ஆலோசனைகளை வழங்கினார்கள். அரசரும் பொறுமையுடன் அனைத்தையும் கேட்டு கொண்டார்.
இரவு, வு யான் அரசரின் மாளிகைக்கு வந்து அரசர் மெத்தையில் உருள்வதை பார்த்தார்.
என்ன நட ந்தது அரசே?
வு யான். நான் நடிக்க வில்லை, எனக்கு கடும் தலை வலி.


என்னை பார்க்க வந்த ஒவ்வொருவரும் ஆலோசனை சொன்னார்கள். அவர்களை பார்த்தால் எல்லோரும் மருத்துவர்கள் போல இருக்கிறது. நம் நாட்டில், இவ்வளவு மருத்துவ நிபுணர்கள் இருப்பது எனக்கு தெரியாது.
வு யான். நீ வெற்றி அடைந்தாய். நான் உன்னை பாராட்டுகிறேன். என் தலை வலிக்கு ஏதாவது செய்.
ஹோ.. ஹா..ஹா
வு யான் நன்றாக சிரித்தான்.


பழிக்குப் பழி


மிகவும் பேர்போன ஆபத்தான ஒரு கொள்ளைகார கும்பல் இருந்தது.
ஒரு நாள், அந்த கூட்டத்தில் ஒருவர் தகவலுடன் வருகிறார்.
நல்ல விஷயம் மக்களே. இது வெற்றி அடைந்தால் நமது சொத்து இரு மடங்காவது நிச்சயம்.
சரி. சொல்லு. எதை பற்றி சொல்கிறாய்?
இங்கிருந்து ஐந்து கிலோமீட்டர் தொலைவில் கானா என்று ஒரு கிராமம் உள்ளது. அங்கு ஒரு செல்வந்தர் தனது மகளுக்கு திருமணம் செய்து வைக்க போகிறார்.
ஆம்..ஆம்.
ஆம்..ஆம்.
ஹா..ஹா.. நீ சொல்வது புரிந்தது. நாம் நல்ல சந்தர்ப்பம் பார்த்து அவர்களை தாக்கலாம்.


ஒரு இரவு அவர்கள் கானா கிராமம் சென்றார்கள். ஆனால் அவர்களால் அந்த செல்வந்தரின் வீட்டை கண்டு பிடிக்க முடியவில்லை.
யாரவது ஒருவரின் கதவை தட்டி சாதாரணமாக நாம் விசாரிக்கலாம்.
சரி
இருட்டில் ஒரு வீட்டை கண் டுபிடித்து கதவை தட்டினார்கள்.
ஒரு வயதான மனிதர் கதவை திறந்தார்.
வணக்கம் ஐயா, நாங்கள் கல்யாணத்தில் பங்குக்கொள்ள வந்தோம். ஆனால் எங்களால் அவர் வீட்டை கண்டுபிடிக்க முடியவில்லை. அவர் வீட்டை கண்டுபிடிக்க உதவி செய்வீர்களா?
ம்..ம்.. தயவு செய்து இங்கு காத்திருங்கள். நான் எனது கம்பளியை கொண்டு வருகிறேன். மிகவும் குளிராக உள்ளது.


வயதான மனிதன் உள்ளே சென்று பல நேரம் கழித்தும் திரும்பவில்லை.
அவர் ஏன் இன்னும் வெளியே வரவில்லை?
காற்றில் மறைந்து விட்டாரா? ஹா..ஹா..ஹா.
யாருக்கு தெரியும்! ஹா ஹா ஹா.
ஷ்.ஷ்..ஷ்.. பொறுமையாக பேசு. நள்ளிரவுக்கு மேல் ஆகிவிட்டது..
இந்த மனிதரை இதற்கு முன் எங்கோ நான் பார்த்த மாதிரி இருக்கிறது.
ஆமாம்.. எனக்கும் அப்படி தான் இருக்கிறது.
சரி, உள்ளே சென்று பார்க்கலாம் வா.
எனக்கு தெரிந்து விட்டது. ஞாபகம் இருக்கிறதா? இரண்டு வருடங்களுக்கு முன் நாம் இந்த கிராமத்தை தாக்கினோம்.


இந்த வீட்டை தான் கொள்ளையடித்தோம். இந்த வீட்டில் இருந்தவர்கள் உதவி கேட்டுக் கத்த, நாம் அவர்கள் வாயை அடைத்து, அவர்களை கட்டி போட்டு, வீட்டிற்கு நெருப்பு வைத்தோம்.
ஐயோ, ஆமாம்..
ஆனால் நாம் வீட்டை எரித்த போது அவரும் அங்கு இருந்தாரே..
பின், அவர் உயிருடன் இருப்பது எப்படி சாத்தியம்?
ஒருவேளை அவர் தப்பித்திருக்கலாம்.
நானும் அதைத் தான் நினைக்கிறேன். வா உள்ளே சென்று அவர் எங்கு மறைந்தார் என்று பார்க்கலாம்..


மொத்த கூட்டமும் வீட்டிற்குள் மெதுவாக சென்றனர்.
திடீரென
CRRRRRRRR.......
கதவுகள் மூடின..
என்ன நடந்தது?
எல்லோரும் பயந்து இங்கும் அங்கும் ஓடினர்.
ஒ.. அவர் பேய் என்று சொல்லாதே..
எல்லோரும் ஓடுங்கள்.. உங்களை காப்பாற்றிக் கொள்ளுங்கள்


இங்கு என்ன நடக்கிறது..யாராவது சொல்லுங்கள்.
கடவுளே..
திடீரென அனைத்து கதவுகளும் ஜன்னல்களும் தானாகவே மூடிக் கொண்டன.
தயவு செய்து வாயை மூடு.
அது என்ன நாற்றம்?
ஏதோ எரிகிறது...
திடீரென அவர்களை நெருப்பு சூழ்ந்து கொண்டது.
எனக்கு இப்போது புரிகிறது. அந்த வயதான மனிதர் ஒரு பேய். நம்மை பழி வாங்குகிறார்.
என்ன?


மொத்த வீடும் நெருப்பில் எரிந்தது. அந்த மொத்த கொள்ளை கூட்டமும் எரிந்து சாம்பல் ஆனார்கள்.
அதற்குள் அந்த வீட்டு வாசலில் கிராம மக்கள் கூடினர். ஆனால் அவர்களுக்கு அங்கு என்ன நடந்தது என்று தெரியவில்லை.
இந்த பழைய வீடு எப்படி எரிகிறது?
இரண்டு வருடத்திற்கு முன் நடந்த அந்த துயர சம்பவத்திற்கு பின் இந்த வீடு பாழடைந்து கிடந்ததே.
நம்ப முடியவில்லை.. எப்படி தீ பிடித்தது?
கிராமத்தில் இருந்தவர்களுக்கு இது அந்த வயதான மனிதனின் பழி வாங்கும் செயல் என்று புரியவில்லை.
முடிவு


நல்ல உள்ளம் கொண்டவர்கள்.


முன்பொருகாலத்தில், ஜேசன் என்று ஒரு இளைஞன் காட்டின் வழியே செல்ல திட்டமிட்டிருந்தான்.
ஜேசன் ஒரு ஓடை வழியாக செல்லும்போது மூன்று மீன்கள் தண்ணீரில்லாமல் தவிப்பதை பார்த்தான்.
ஓ.. தண்ணீர் அழிகிகளே, நான் வருகிறேன்.
ஜேசன் மீன்களை தண்ணீரில் விடுகிறான்.
மிக்க நன்றி.
நல்லது.
உனது உதவியை நாங்கள் மறக்க மாட்டோம் இளைஞனே.
ஜேசன் குதிரையில் செல்கிறான்.


ஜேசன் சென்றுகொண்டிருக்கும்போது ஒரு கோபமான குரல் கேட்டது..
ஓ.. எறும்பு ராஜா ஏதோ காரணத்திற்காக கோபமாக இருக்கிறார்.
மனிதர்களுக்கு உணர்வே இல்லை. அவர்கள் எங்கள் மீது நடந்து செல்கிறார்கள். அவர்களுக்கு எதன் மேல் நடக்கிறோம் என்று பார்க்க கண்கள் இல்லையா?
நூற்றுக்கணக்கான எறும்புகள் இந்த கவன க்குறைவால் இறந்து போகின்றன.
ராஜாவின் வருத்தத்தை புரிந்து கொண்டு, ஜேசன் வேறு வழியில் செல்கிறான்...
எறும்பு ராஜா ஜேசன் இப்படி செய்ததை பார்த்தார்.
நீ நல்ல மனம் படைத்தவனாக இருக்கிறாய். கடவுள் உன்னை காப்பாற்றுவார்.
ஜேசன் செல்லும்போது, கழுகு குடும்பம் பேசுவதை கேட்டான்.
நீங்கள் தனியாக இருக்கும் நேரம் வந்து விட்டது.


ஆனால் தந்தையே, நாங்கள் எப்படி உயிர் வாழ்வோம், நாங்கள் இன்னும் சிறியவர்கள் தானே
இப்படி சொல்லிவிட்டு தந்தை கழுகு சென்று விட்டது.
நமக்கு உணவு தேட தெரியாதே?
ஓ.. நாம் எப்படி உயிர் வாழ்வோம்?
ஜேசன் குட்டி கழுகுகளை பார்த்து இரக்கம் கொண்டான்.
கவலைப்படாதீர்கள்: நான் உங்களுக்கு இப்போது உணவளிக்கிறேன். மேலும் வேட்டையாட கற்று தருகிறேன்.
இரண்டு நாட்கள், ஜேசன் அவைகளுடன் இருந்து இறை தேட சொல்லி கொடுத்தான்.
நன்றி நல்ல மனிதனே. உனது உதவியை நாங்கள் மறக்கவே மாட்டோம்.
ஜேசன் ஒரு அழகான நகரத்தை அடைந்தான்.
அரசர் இளவரசிக்கு ஒரு பொருத்தமான துணையை தேடிக் கொண்டிருக்கிறார். யாரொருவர், அவர் வைக்கும் பரீட்சையில் தேர்வு பெற்றாலும் அவர் இளவரசியை மணக்கலாம்.


அடுத்த நாள், மாளிகையை கடந்து செல்லும்போது ஜேசன் பால்கனியில் இளவரசியை கண்டான்.
ஆஹா.. அவள் மிகவும் அழகாக இருக்கிறாள்.
அவன் இளவரசியை மணக்க நினைத்து அரசரிடம் சென்றான்.
இளைஞனே, நீ மூன்று தேர்வுகளில் வெற்றி பெற வேண்டும்.
நான் தயாராக இருக்கிறேன் அரசே.
முதல் பரீட்சை. வீரர் மோதிரத்தை நதியில் தூரமாக வீசி எறிந்தார்.
பொய் மோதிரத்தை கொண்டு வா.
ஜேசன் நீச்சல் அடிக்க ஆரம்பித்தான். மோதிரத்தை தேடும் பொது, ஒரு மீன் வந்தது..
பாப்..
பாப்..பாப்.


வணக்கம் இளைஞனே, ஞாபகம் இருக்கிறதா? சில நாட்களுக்கு முன் நீ காப்பாற்றியது எங்களைத்தான்...
ஆஹ..ஓ...
கவலைப்படாதே, உனக்கு மோதிரத்தை நாங்கள் கொண்டுவந்து தருகிறோம்...
இவ்வாறு சொல்லிவிட்டு அவை மீண்டும் தண்ணீருக்குள் சென்றன.
சில நிமிடங்களில் அவை ஜேசனுக்கு மோதிரத்தைக் கொண்டு வந்து கொடுத்தன.
கடவுளே! இந்த உதவிக்கு மிக்க நன்றி...
உனக்கு உதவுவதில் எங்களுக்கு சந்தோஷமே...
மீண்டும் நன்றி, வருகிறேன்...
சென்று வருக இளைஞனே, வாழ்த்துக்கள்!


ஜேசன் மோதிரத்துடன் மாளிகைக்கு சென்றான்.
அரசே, இதோ இங்கே.
இரண்டாவது பரீட்சை.
நான் சொல்கிறேன் தந்தையே
இளவரசி மாளிகையின் பின்புறம் அழைத்துச்சென்று சில தாமரை விதைகளை காண்பித்தாள்
இளைஞனே நீ அனைத்து விதைகளையும் எடுத்து இந்த கோணிகளில் போட வேண்டும்.
ஜேசன் அதிர்ச்சி அடைந்தான்.
இது எப்படி சாத்தியம்?
அப்போது, அங்கு சாரியாக எறும்புகள் வந்தன.
கவலை படாதே, உதவ நாங்கள் இருக்கிறோம்.
ஜேசன் ஆயிரக்கணக்கான எறும்புகள் ஒன்றாக சேர்ந்து விதைகளை திரட்டுவதை பார்த்தான்


அடுத்த நாள், கோணிகள் விதைகளுடன் தயாராக இருந்தன.
நல்லது ஜேசன். நீ என்னை ஈர்த்துவிட்டாய்.
கடைசி பரீட்சை. கடலுக்கு அந்த பக்கம், ஒரு சிறப்பு மரம் இருக்கிறது அதில் ஒரு சிறப்பு பழம் உள்ளது. நீ அதை அந்த மரத்திலிருந்து எடுத்து வர வேண்டும்.
ஜேசன் அவனுடைய பணிக்கு கிளம்பினான்.
சில கழுகுகள் அங்கு வந்தன..
எங்களை தெரியவில்லையா? நீ தான் காட்டில் எங்களுக்கு உதவி செய்தாய். இளைஞனே, கவலை படாதே, உனக்காக பழத்தை நாங்கள் கொண்டு வருகிறோம்.


சொல்லிவிட்டு, அவை பறந்து சென்றன...
சில மணி நேரங்களுக்கு பிறகு, அவை பழத்துடன் வந்தன.
நன்றி
நாங்கள் கௌரவிக்கப்பட்டோம்
ஜேசன் பழத்தை அரசரிடம் எடுத்து சென்றான்.
என்னை மிகவும் கவர்ந்துவிட்டாய் இளைஞனே, நீ தான் இளவரசிக்கு தகுதியானவன்.
அரசர் இளவரசியை ஜேசனுக்கு திருமணம் செய்து வைத்து அரசராக முடி சூட்டினார்.
முற்றும்.

# மூன்று திருடர்கள்




ஸ்டீவ், க்ளைவ், ஒலிவ் மூவரும் சகோதரர்கள். அவர்கள் திருடர்கள்.
மகன்களே, மக்களிடம் திருடுவதை நிறுத்துங்கள். அது தவறான செயல்.
அன்னையே, நீங்கள் எங்களுக்கு பாடம் புகட்டுவதை நிறுத்துங்கள்.
ஒரு தாயாக, உங்களுக்கு புத்தி சொல்வது என் கடமை. இந்த வழியில் சம்பாதித்த பணம் உங்களை ஒரு நாள் பாதிக்கும்.
ஒரு தாயாக, அவள் தினமும் தனது மகன்களுக்கு புத்தி சொல்வாள், அவர்களின் நலனுக்காக வேண்டி கொள்வாள். ஆனால் பயனில்லை.
கடவுளே, அவர்களை பார்த்து கொள். அவர்களுக்கு நல்லறிவு வர அருள் புரி. அவர்களின் நல்லெண்ணத்தின் மூலம் அவர்கள் தங்களை மாற்றி கொள்ளட்டும்.
ஒரு நாள்..
அன்னையே, தயவு செய்து நாங்கள் கடவுள் அருளால் தான் நன்றாக இருக்கிறோம் என்று கடவுளை பாராட்டுவதை நிறுத்துங்கள்.
எங்களை பார்த்துக் கொள்ள எங்களுக்கு தெரியும்.


அன்னை அவர்களின் நடத்தை மேல் கோபம் கொள்கிறாள்.
நீங்கள் மூவரும் திருந்த மாட்டீர்கள். உங்களுக்காக இன்று முதல் நான் கடவுளிடம் பிரார்த்தனை செய்ய மாட்டேன்.
வழக்கம் போல, மூவரும் வேறு வழிகளில் திருட செல்கிறார்கள்.
மூவரில் இளையவன் ஒரு வயதான மனிதனின் வீட்டிற்கு திருட சென்றான்.
நான் இன்று அன்னைக்கு கடவுள் தயை இல்லாமல் என்னால் என்னை பார்த்து கொள்ள முடியும் என்று நிரூபிக்கிறேன்.
ஒலிவ் மெதுவாக அந்த வீட்டிற்குள் சென்று அந்த வயதான மனிதன் ஆழ்ந்த உறக்கத்தில் இருப்பதை கவனித்தான். அங்கிருந்து விலைமதிப்புள்ள பொருட்களை சுவருக்கு வெளியே தூக்கிப் போட ஆரம்பித்தான்.


இந்த மாதிரி செய்து கொண்டிருக்கும் போது, ஒரு பொருள் கீழே விழுந்து பெரிய சத்தம் ஏற்பட்டது.
யாரங்கே? ஏன் என்னுடைய பொருட்களை அந்த பணக்கார மனிதனின் வீட்டிற்குள் போடுகிறாய்?
ஒ.. நான் அதை சாலையில் போடுவதாக நினைத்தேனே.
ஒலிவ் சுவர் ஏறி கொண்டிருக்கும்போது மக்கள் அங்கு வந்து அவனை அடிக்கிறார்கள்
இங்கிருந்து ஓடி விடுகிறேன்.
திருடன் திருடன் பிடியுங்கள்
க்ளைவ் ஒரு வீட்டிற்கு சென்று அங்கு அனைவரும் ஆழ்ந்த உறக்கத்தில் இருப்பதை பார்த்தான். மெதுவாக, கதவு தாழ் அருகில் ஓட்டை போட்டான். அந்த ஓட்டை வழியாக கதவை திறக்க நினைத்தான்.
வீட்டு உரிமையாளர் சத்தம் கேட்டு அது திருடன் எனமுடிவு செய்தார். மெதுவாக ஒரு பெரிய கத்தி எடுத்து கொண்டு இருட்டில் கதவருகில் சென்றார்.


க்ளைவ் ஓட்டை வழியாக கதவின் தாழ் திறக்க கையை விடுகிறான்.
சரி.. நீ உனது வேலையை செய்து விட்டாய்.. இப்போது நான் எனது வேலையை செய்கிறேன்.
கத்தியை வைத்து அவர் க்ளைவின் கையை அறுத்தார். அவன் கையில் ஒரு ஆழ்த்த காயம் ஏற்பட்டது.
இந்த வாங்கி கொள்..
க்ளைவ் வலியுடன் அலறினான். அங்கிருந்து ஓடி விட்டான்.
ஸ்டீவ் எப்போதும் பெரிய திருட்டுக்கள் தான் செய்வான். தனது இரண்டு நண்பர்களுடன் சேர்ந்து பெரிய திட்டம் தீட்டினான்.
நான் கரடி போல் மாறுவேடமிடுகிறேன். நீங்கள் சென்று பண்ணை உரிமையாளரை அவருடைய விலங்கு கூட்டில் என்னை வைத்து கொள்ள சொல்லுங்கள். சரி. உங்களுக்கு நமது திட்டம் புரிந்ததா?


இரண்டு மனிதர்கள் கரடியுடன் உரிமையாளரிடம் சென்றார்கள்.
நாங்கள் வழிப்போக்கர்கள். இருட்டி விட்டது, எங்கள் கிராமம் இங்கிருந்து வெகு தூரத்தில் உள்ளது.
எங்கள் கரடியை இங்கு வைத்து கொள்ள அனுமதி தாருங்கள். நாங்கள் காலையில் வந்து கொண்டு சென்று விடுவோம்.
அவர் தனது ஆட்களை கரடியை கூண்டில் அடைக்குமாறு சொல்கிறார்.
நிச்சயமாக. கரடி மீதி மிருகங்களுடன் இருக்கட்டும்.
நன்றி ஐயா, உங்களை காலையில் சந்திக்கிறேன்.
இரவு, வெகு நேரத்திற்கு பிறகு, எல்லோரும் உறங்கிய பின், மெதுவாக வெளியே வந்து உரிமையாளரின் அலமாரியின் அருகில் சென்றான்.
திடீரென நாய்கள் குரைக்க ஆரம்பித்தன. எல்லோரும் எழுந்தனர்.
நான் இங்கிருந்து இப்போது ஓடுவது தான் எனக்கு நல்லது.


ஸ்டீவ் ஓட ஆரம்பித்தான். அவனுடைய வேடம் கலைந்தது.
ஓ..அங்கே பாருங்கள். அங்கு ஒரு மனிதன் இருக்கிறான். திருடன்.. திருடன்.. பிடியுங்கள்.
அவர்கள் அவனை பிடித்து அடிக்கிறார்கள். அவன் பாதி உயிருடன் வீட்டிற்கு சென்றான்.
அன்று இரவு, மூவரும் அவர்கள் கதைகளை சொன்னார்கள்.
சகோதரர்களே, நமது அன்னை சொன்னது சரி தான். கடவுள் அருள் இல்லாமல், நாம் ஒன்றுமில்லை. நாம் நமது பாடத்தை கற்று கொண்டோம். நேர்மையாகவும் கடினமாகவும் உழைத்து பணம் சம்பாதித்து இனி ஒரு புதிய வாழ்க்கையை தொடங்கலாம்.
அதன் பிறகு, மூவரும் கடினமாக உழைத்து வாழ ஆரம்பித்தார்கள். அவர்கள் எப்போதும் அன்னையின் அறிவுரைப் படி நடந்தார்கள்.
முடிவு.


கடைசிபாடம்


யமாடோ ராஜ்ஜியத்தை அரசர் ஜிம்மு திறமையாக ஆண்டு வந்தார். ஜிம்முவிற்கு இடோகு என்று ஒரு மகன் இருந்தான்.
இளவரசர் இடோகு மாளிகையிலிருந்து தொலை தூரத்தில் ஆசிரியர் சூசெய்யின் மேற்பார்வையில் கல்வி பயின்று வந்தார்.
ஆசிரியர் சூசெய்யின் பள்ளியில் மாணவர்கள் வெவ்வேறு பின்னணியிலிருந்து இருந்தனர். ஜாதி மத பாகுபாடு கிடையாது. எல்லோரும் தங்கள் குடும்ப நிலைப்படி கட்டணத்தை செலுத்த வேண்டும்.
இளவரசர் இடோகு அனைத்து பாடங்களையும் கற்றார். ஒரு நாள் ஆசிரியர் அவரை அழைத்தார்.
என்னுடன் ஒரு நடைக்கு வருவாயா? இடோகு:
வருகிறேன் ஆசிரியரே


ஆசிரியர் குதிரையின் மேல் உட்கார்ந்திருந்தார். இளவரசர் இடோகு அவர் பின் நடந்து சென்றார். ஆசிரியர் வெவ்வேறு பாடங்களை விவரித்து கொண்டிருந்தார்.
திடீரென சூசெய் குதிரையை வேகமாக ஓட்டினார். இளவசர் இடோகு வேகமாக ஓட ஆரம்பித்தார்.
இளவசர் இடோகு சோர்ந்து போனார் மேலும் அவருக்கு நிற்காமல் வியர்வை வந்து கொண்டிருந்தது. ஆனாலும் ஆசிரியர் வேகத்தை குறைக்கவில்லை.
அந்த நேரம் அரசர் அந்த இடத்திற்கு வந்தார். இந்த நிகழ்வை பார்த்து கடும் கோபம் கொண்டார்.
அவர் ஆசிரியராக இருந்தாலும் இளவரசர் இடோகுவை இந்தமாதிரி கடினமான சோதனைக்கு ஆளாக்க கூடாது.


அங்கு சென்று ஆசிரியரை தடுக்க நினைத்தார்.. ஆனால் நின்று விட்டார்.
இந்த மாதிரி இளவரசரை ஆசிரியர் ஓட செய்வதற்கு ஏதாவது காரணம் நிச்சயமாக இருக்க வேண்டும்.
சிறிது நேரத்திற்கு பிறகு, ஆசிரியர் குதிரையை நிறுத்தினார். இளவரசர் சோர்வாக இருந்தார்.
இடோகு உனது கல்வி இன்று நிறை வுற்றது.
ஆசிரியருக்கு அரசரின் வருகை பற்றி தெரிய வருகிறது.
வாழ்த்துக்கள் அரசே. இளவரசர் இடோகு இன்று தனது கல்வியை முடித்து விட்டார்.
அரசே, இது எனது கட்டண நேரம்.
சொல்லுங்கள். உங்களுக்கு என்ன வேண்டும்.


எனக்கு மொத்த ராஜ்யத்தையும் கட்டணமாக கொடுங்கள்.
அரசர் ஆச்சரியப்பட்டார் ஆனாலும் யோசிக்காமல், மொத்த ராஜ்ஜியத்தையும் ஆசிரியருக்கு கொடுத்து விட்டார்.
நிச்சயமாக, தாங்கள் சொல்வதை ஏற்றுக்கொள்வது எங்கள் கௌரவம்...
இடோகு, இந்த ராஜ்ஜியம் என்னுடையது. ஆனால் எனக்கு ஆசை எதுவும் இல்லை.
என் சார்பாக நீ இந்த நாட்டை ஆள்வாய். ஆனால் ஞாபகம் இருக்கட்டும். இந்த ராஜ்ஜியம் உன்னுடையதல்ல.


அரசருக்கு ஆசிரியர் செய்ததின் அர்த்தம் புரிந்தது. இளவரசர் இது தனது ராஜ்ஜியம் என நினைத்தால் தவறாக ஆட்சி செய்ய கூட வாய்ப்பு உள்ளது.
ஆசிரியரே, எதற்காக ராஜ்ஜியத்தை கேட்டீர்கள் என்று இப்போது புரிகிறது...
ஆனால் இப்போது இளவரசர் ஆசிரியருக்காக ஆட்சி செய்வதால் தவறே நடக்காது.
ஆசிரியரே, எனக்கு ஒரு கேள்வி. நீங்கள் இளவரசை ஏன் குதிரை பின்னால் ஓட விட்டீர்கள்?
அரசே, அதிகாரம் என்பது குதிரை மாதிரி. ஒரு தடவை அதன் மேல் சவாரி செய்ய ஆரம்பித்தால், நாம் பின் வரும் மக்களை மறந்து விடுவோம்.


ஆள்பவர் ஒரு சாதாரண மனிதனை தன் பின் ஓட வைக்க கூடாது.
நமது வருங்கால அரசர் சாதாரண மனிதனின் வேதனையை புரிந்து கொள்வதற்காக அவரை குதிரை பின் ஓட விட்டேன்.
இளவரசர் இடோகு ஆசிரியருக்கு தான் எப்போதும் மக்களின் நலனுக்கே முன்னுரிமை கொடுப்பேன் என்று வாக்களித்தார்.
உங்கள் ஆசிகள் எனக்கு வேண்டும் குருவே...
மன்னர் வாழ்க...
மன்னருக்கு வெற்றி உண்டாகட்டும்...
மன்னர் வாழ்க,வாழ்க...
இடோகு மன்னராக முடிசூட்டப்பட்டார். அவர் நிறைய ஆண்டுகள் ஆட்சி செய்தார். மக்கள் வளத்துடன் மகிழ்ச்சியாக இருந்தனர்.
முடிவு.



Buy Books & eBooks Online at www.indianvedicschool.com

**INDIAN VEDIC SCHOOL PVT LTD.**
Plot No: 29B, Laxmi Nilayam, Road No: 8, Film Nagar,
Jubilee Hills, Hyderabad - 500096, Telangana, India.
info@indianvedicschool.com